சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.4369/ஈ2/2022 நாள்.21.06.2022

------

பொருள்: நான் முதல்வன் திட்டம் – உயர் கல்வி வேலை வாய்ப்பு வழிகாட்டி கையேடு சார்ந்து முதுகலை ஆசிரியர்களுக்கான பயிற்சி அளித்தல் – நடைமுறைப்படுத்துதல் – தொடர்ந்து.

பார்வை:
1 மாண்புமிகு சட்டப்பேரவை பள்ளிக்கல்வித் துறையின் அறிவிப்புகள 2021 – 2022 அறிவிப்பு எண்.10.
2 சென்னை-06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.2818/ஈ1/2021 நாள்.20.06.2022.

-----

மேற்காண் பொருள் சார்ந்து பார்வை (1) இல் காண் செயல்முறைகளின்படி, பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்களுக்கு பள்ளி ஒன்றுக்கு ஒரு முதுகலை ஆசிரியர் வீதம் உயர்கல்வி வேலை வாய்ப்பு வழிகாட்டி கையேடு சார்ந்து, 2021-2022 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பில் பயின்ற மாணவர்களுக்கு உயர் கல்வி மற்றும் வழிகாட்டுதல் சார்ந்த பயிற்சி வழங்கப்படவுள்ளதால், ஏற்கனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நடைபெறவுள்ள பயிற்சியில் பங்கேற்க செய்யுமாறும், மேல்நிலைப் பிரிவுகளில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ள இணைக்கப்பட்ட பள்ளிகளில் இருந்து கூடுதலாக ஒரு முதுகலை ஆசிரியரும் 24.06.2022 மற்றும் 25.06.2022 ஆகிய நாட்களில் நடைபெறும் ஒரு நாள் பயிற்சியில் தவறாமல் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதுகலை பாட ஆசிரியர்கள் பயிற்சியில் கலந்துக்கொள்ள வேண்டிய நாள் மற்றும் பயிற்சி நடைபெறும் இடம் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாசிரியர்களை பயிற்சி மையத்திற்கு விடுவித்து அனுப்புமாறு சார்ந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| நாள். | கலந்துக்கொள்ள வேண்டிய பள்ளிகள் | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | பயிற்சி மையம் |
|---|---|---|---|
| 24.06.2022 | சென்னை வடக்கு கல்வி மாவட்டம் – மேல்நிலைப் பள்ளிகள் | 53 | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், லேடி வெலிங்டன் வளாகம், காமராஜர் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-05. |
| | சென்னை கிழக்கு கல்விமாவட்டம் - மேல்நிலைப் பள்ளிகள் | 46 | |

| நாள். | கலந்துக்கொள்ள வேண்டிய பள்ளிகள் | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | பயிற்சி மையம் |
|---|---|---|---|
| 24.06.2022 | சென்னை மேற்கு கல்வி மாவட்டம் – மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மேற்காண் நாள்களில் பயிற்சியில் கலந்துக்கொள்ளாத மேல்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்கள். | 26 | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், லேடி வெலிங்டன் வளாகம், காமராஜர் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-05. |
| 25.06.2022 | சென்னை மத்தியக் கல்வி மாவட்டம் – மேல்நிலைப் பள்ளிகள் | 52 | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், லேடி வெலிங்டன் வளாகம், காமராஜர் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-05. |
| | சென்னை தெற்கு கல்வி மாவட்டம் – மேல்நிலைப் பள்ளிகள் | 52 | |
| | மொத்தம் | 229 | |

இணைப்பு : பள்ளிகளின் பெயர் பட்டியல்.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை.

பெறுநர்

அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர், சென்னை-05 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவல்லிக்கேணி, சென்னை-05.
3. தலைமையாசிரியர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், சென்னை மாவட்டம்.